தூய அறிவே துணை

# நிறைவும் நிம்மதியும்

ஆசிரியர் : அர. இலட்சுமணசாமி

வெளியீடு:

**தீபம் அறக்கட்டளை**

அரசு பதிவு எண் : 2035/07

எண் 30, திரௌபதி அம்மன் கோயில் தெரு,

வேளச்சேரி, சென்னை 600 042.

கைப்பேசி : 94440 73635

மின்னஞ்சல் : trust.deepam@yahoo.co.in

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நிறைவும் நிம்மதியும் |
| ஆசிரியர் | : | அர. இலட்சுமணசாமி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு விவரம் | : | 1/8 டெமி |
| பதிப்பாண்டு | : | 2014 |
| பதிப்புரிமை | : | தீபம் அறக்கட்டளை |
| நூலின் அளவு | : | 1/8 டெமி |
| அச்செழுத்து | : | 13 புள்ளிகள் |
| முதல் பதிப்பு | : | 1000 புத்தகங்கள் |
| நூலின் கட்டுமானம் | : | பர்பெக்ட் பைண்டிங் |
| வெளியீட்டாளர் | : | **தீபம் அறக்கட்டளை**<br>அரசு பதிவு எண் : 2035/07<br>எண் 30, திரௌபதி அம்மன் கோயில் தெரு,<br>வேளச்சேரி, சென்னை-600 042.<br>கைப்பேசி : 94440 73635<br>மின்னஞ்சல் : trust.deepam@yahoo.co.in |
| அச்சிட்டோர் | : | **ஸ்ரீ ஆப்செட் பிரிண்டர்**<br>எண் 840, அண்ணா சாலை,<br>சைதாப்பேட்டை, சென்னை-600 015.<br>தொலைபேசி : 044 42012400 |


**விற்பனைக்கல்ல. நன்கொடை ஏற்கப்படும்**

**இந்நூலுக்கு அளிக்கப்படும் நன்கொடைகள் தீபம் அறக்கட்டளையின் மனிதநேய சமுதாய நலப்பணிகளுக்கு செலவிடப்படும்.**

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

**எல்லாம் செயல் கூடும்! என் ஆணை அம்பலத்தே!**
**எல்லாம் வல்லான் தனையே ஏற்று!**



எல்லாம் வல்ல அருட்பெருங்ஜோதி ஆண்டவர்

# திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான்

திருமலரடி பாதங்களுக்கு இந்நூல் சமர்பணம்

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!**
**வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!**


பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...
வளமான உலகம்
உருவாக்குவோம்!

# அறிமுக உரை

"கேடில் விழுச்செல்வம் கல்வி" என்கிறார் வள்ளுவர். "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்கிறது நாலடியார். எத்தனையோ நுற்றாண்டுகளாக, எண்ணிக்கையில் அடக்கிட முடியாத அறிஞர் பெருமக்கள் ஆற்றுவித்த நூல்கள் ஏராளம்! ஏராளம்!!

சொல்லப்பட்டவைகளையே, திருப்பிச் சொல்பவைகளாக அமைந்திட்ட நூல்களும் இதில் அடங்கும். கிள்ளைமொழி நூல்கள் அவசியமற்றவை அல்ல. ஒரு கருத்தினை வலியுறுத்தவதற்காக, நற்கருத்துக்களை பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து, சென்றடைய வேண்டியவர்கட்கு, சென்றடைய வேண்டிய தரத்திலும், அளவிலும் சென்று சேர்ந்திட எடுக்கப்படும் முயற்சிதான் கிள்ளை மொழி நூல்களின் பயன்பாடு. இதுவும் ஒரு கிள்ளை மொழி நூல்தான்.

நான் படித்தவை – என் மனதில் பதிந்தவைகளை பகிர்ந்து கொள்ளும் ஆவலைத்தவிர வேறில்லை. முழுமையாக ஒரே மூச்சில் படிக்கத் தூண்டும் நூலல்ல இது. வேண்டும் போதேல்லாம் படிக்கலாம்.

"மாந்தர்க்குக் கற்றனைத் ஊறும் அறிவு" என்கிறார் வள்ளுவர். இந்நூலின் மூலம் தங்களுக்கு அறிமுகமாக விரும்புகிறேன். இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த தீபம் பாலாவிற்கும், தீபம் நிர்வாகிகட்கும், தீபம் குழுவினர்கட்கும் என் இதயங்கனிந்த நன்றிகள் சமர்ப்பணம்...

**அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர்

# அணிந்துரை

**நல்ல தமிழில் ஒரு ஞானதானம்**

"நிறைவும் நிம்மதியும்" என்று தொடங்கி "அற்புதங்கள்" என்று நிறைவடையும் இந்த நூலின் கட்டுரைகள் எல்லாமே அற்புதங்கள். நடந்து செல்லும் இந்தச் சிந்தனா நதியில் மிதந்து உடன் செல்வது எவ்வளவு சுகமானது. அறிஞர் அர.இலட்சுமணசாமி வயதால் பழையர்! எண்ணத்தால் இளையர்!

பச்சைப்புல்லைத் தின்று செங்குருதியாக்கி, வெள்ளைப் பாலைத் தருகின்ற காராம் பசுவைப்போல, பட்டறிவை வாழ்வியல் மந்திரமாக்கி வழங்கியுள்ள வள்ளல்தான் அர. இலட்சுமணசாமி! ஞானதானம் நல்கியதால் அவர் ஒரு ஞான வள்ளல்!.

நூலை அறிவது வேறு! உணர்வது வேறு! அறிந்தார் அறிவுரைகளைவிட, உணர்ந்தார் அறிவுரைகளே உயரியவை!. அய்யா அர. இலட்சுமணசாமி உயரியவர்! ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்.

அரிஓம் என்று உச்சரித்துக் கொண்டிருப்பவர்களுக்குக் கூட அறிவோம் என்னும் செருக்குண்டு. அடக்கம் அறிவின் முகவரி! எதற்கு வேதம் ஓதுகின்றோம். நான்மறையும் ஓதுகின்றோம். ஏன்? "நான்" மறையும் என்று! நான் மறையும் என்றன்றோ நான்மறையும் ஓதுகின்றோம். ஆனால் நடப்பது என்ன? நானும் மறையவில்லை, எனதும் மறையவில்லை. இம்மை ஞானமும் அம்மை ஞானமும் கூடிய செம்மை ஞானம் இவர்கட்குச் சித்தித்தது எவ்வாறு?

பெருமான் அருளால்! பெருமான் யார்? வள்ளலார்க்கன்றி யார்கந்த திருப்பெயர் பொருந்தும்.

மண் நோக நடக்காமல்
மாதா சிவகாமி
கண் நோக நடக்குமந்தக்

கருணை வடிவினர்க்குப்
பூப்போட்டு அருச்சித்தால்
பொன் அடிகள் நோகுமென்று
பாப்போட்டு அருச்சிக்கப்
பாவலர்களே வாரீரோ!

மூன்று நான் அழைத்திருக்கிறேன். மென்மையே வடிவான அந்த மேன்மையாளரைப் பருகுவது போன்ற அன்புடையர்க்குப் பெருகுவது ஞானம்!

தெள்ளு தமிழில் துள்ளு நடையில் நமக்கு நிறைவும்
நிம்மதியும் தருகின்ற அய்யா வாழ்க!
தீபம் அறக்கட்டளை வாழ்க!
பண்பாளர் பாலா பல்லாண்டு காலம்
பணியாண்டு வாழியவே!
வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!

இன்ப அன்புடன்
இலக்கிய சக்கரவர்த்தி **இளந்தேவன்**
ஐயப்பந்தாங்கல்
99400 92876
உரையாடி உறவாட!

# வாழ்த்துரை

வாழ்க்கையின் பயனையும், பொருளையும் விளக்க முடியாது. வாழ்வாங்கு வாழ்ந்து பார்த்தால் மட்டுமே அதன் நுட்பம் புரியும். ''நிறைவும் நிம்மதியும்'' என்ற இந்நூல் வாழ்க்கையை புரிந்திட உதவியாக இருக்கிறது. சக மனிதர்களிடம் நம்பிகையை விதைக்கும் போது சமூகம் மேன்மை அடைய வழிவகுக்கும். மற்றவர்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவுங்கள் என்ற கருத்தினை மிக ஆழமாக "நிறைவும் நிம்மதியும்" என்ற இந்நூல் விளக்குகிறது.

கண் எதிரே கஷ்டப்படும் ஏழையை கைதூக்கி வாழ்க்கையில் முன்னேற்ற பாதையில் ஏற்றிவிடுவது தான் உன்னதமான உண்மையான சாதனை என்பதனை சமூக அக்கறையுள்ள 80 வயது இளைஞர் திரு. லட்சுமணசாமி அய்யா மிக எளிமையாக விளக்கியுள்ளார்.

**நான் மிகவும் விரும்பிய கட்டுரைகள் :**

பிறவாமை

மாற்றங்கள்

அணுகுமுறை

மூன்று விண்ணப்பங்கள்

புகழ்ந்துறவு

இந்நூலாசிரியர் நிறைவோடும், நிம்மதியோடும் வாழ்வில் மேலும் சிகரம் தொட நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை நன்றியுடன் சமர்ப்பிக்கின்றேன்

அன்புடன்
பேராசிரியர் ம. முத்துக்குமரன்
செயிண்ட் ஜோசப்ஸ் பொறியியல் கல்லூரி
சென்னை - 600 119

# வாழ்த்துரை

"அரிது அரிது பிறத்தல் அரிது! மானிடராய் பிறத்தல் அரிது" என்ற ஔவை பிராட்டியின் பொன்வரிகளுக்கு இருபத்தொன்றாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற உத்தமர், அறிவுக்காயாய் உதிர்ந்து அன்புக்கனியாய் மலர்ந்த மாசில்லா மாணிக்கம். வள்ளல் பெருமான் காட்டிய மெய்ஞான சன்மார்க்க தங்கம், இன்றைய இளைய தலைமுறையினரின் ஜீவகாருண்ய சிங்கம், அன்புக்கு இனியவர், மவுனப் புன்னகையில் மலர்ந்த மரகதச்சுடர், ஏட்டில் கம்பனைப் போல், வாக்கில் ஹரிச்சந்திரனைப் போல், எழுத்தில் வால்மீகியைப் போல், ''புனைந்துரைக்கும் கதை போல நினைந்துரைக்கப்படுமோ'' என்று உணர்த்திய வள்ளல் பெருமானின் கூற்றுக்கு ஏற்ப வாழும் பண்பாளர், இன்றைய சமுதாயத்தின் அவலங்களை கண்டு கொதித்து, மனம் குமுறி வெளியிட்ட முத்தான வார்த்தைகள் முத்துக்குவியலாய் தீபம் அறக்கட்டளைக்கு அளித்தவர். தயவாளர் கருணைமிகு ரா. லட்சுமணசாமி அவர்கள். அந்த முத்துக்குவியல்களை "நிறைவும் நிம்மதியும்" என்ற தலைப்பில் தீபம் அறக்கட்டளை ஏடாக மாற்றி அந்த ஏடு தங்கள் கரங்களில் இதோ தவழ்கின்றது.

மிக எளிமையாகவும், நல்ல பண்புள்ள பாரம்பரியம் மிக்க கருத்துகளை இரத்தினச் சுருக்கமாகவும் தந்துள்ளார். சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டும், இன்றைய இளைஞர்களை எழுச்சி சுடராகவும் உருவாக்க பாடுபட்ட இந்நூலின் ஆசிரியர் தயவுதிரு அர. லட்சுமணசாமி அய்யா அவர்கள், தர்மத்தின் மீது ஏற்பட்ட மோகம் காரணமாகவும் தர்ம நெறி ஒன்றே குறிக்கோளாக கொண்ட தீபம் அறக்கட்டளையின் மீது தீராத அன்புக்காதலால் உருவாக்கம் பெற்றதுதான் "நிறைவும் நிம்மதியும்" என்னும் இனிய நூல் ஆகும்.

அறியாமையாலும், ஆசையாலும் இலக்கு இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கும் இன்றைய இளைஞர்களுக்கும் இந்நூல் ஒரு இன்பத்தேன். இந்நூலை படிக்கும் ஒவ்வொரு இளைஞனும், தர்மத்தின் சக்தியை உணர்ந்து வாழ்ந்து, அதன்படி

தர்மம் காக்கும் சேவடிகளாய் மாறுவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை, வயது முதிர்ந்தவர்களுக்கும், இல்லத்தரசிகளுக்கும் இந்நூல் ஒரு ஞான மருந்து. வைரத்தை வைரத்தால் தான் பட்டையை தீட்ட முடியும். அதேபோல் இந்நூலும் ஒரு வைரம். இந்நூலை வாசிப்பவர்களும் வைரமாகத்தான் பிரகாசிப்பார்கள் என்பதில் வியப்பேதுமில்லை. இந்த இனிய நூல் தங்களின் கரங்களில் மலர்வதற்கு காரணமான எழுத்துச்சித்தர், திரு அர. லட்சுமணசாமி அய்யா அவர்களை வாழ்த்துவதற்கு வயதில்லை வணங்குகிறோம்.

இந்த நூல் வெளிவருவதற்கு ஒரு மாதத்திற்கு மேலாத இரவும் பகலாக உடலாலும், உள்ளத்தாலும உழைப்பை தந்த தர்மத்தின் நெஞ்சங்களான என் உயிரினும் மேலான அன்பு இதயங்கள் தீபம் அறக்கட்டளையின் நிறுவனர், மனிதரில் புனிதர், பசிப்பினி மருத்துவர் கருணைமிகு தீபம் மு. பாலகிருஷ்ணன் ஐயா அவர்களுக்கும், ஆணி வேர் பேராசிரியர் திரு ம. முத்துக்குமார் அய்யா அவர்களுக்கும் தீபத்தின் அறங்காவலர் மாசற்ற மனித ஜோதி தயவுதிரு R. நாராயணமூர்த்தி அய்யா அவர்களுக்கும் தீபத்தின் தளபதி ஜீவகாருண்ய P.ஆனந்த் அவர்களுக்கும் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி கோடான கோடி நன்றியினை மேலும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூலை மிக சிறப்பாக அச்சிடப்பட்டு சிறந்த முறையில் வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்த சைதாப்பேட்டை ஸ்ரீ ஆப்செட் பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.ஆர்.கே.சேகர் அவர்களுக்கும் தீபத்தின் சார்பாகவும், அடியேன் சார்பாகவும், கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

“நிறைவும் நிம்மதியும்” என்ற இனிய நூல் தீபநெறி வாசகர்களும், தீபத்தின் அன்பு உள்ளங்களும், வள்ளல் பெருமான் வழிவந்த சன்மார்க்க சான்றோர்களும், இளைய பாரதமாய் வீறுகொண்டு எழும் இளம் சேவதாரிகளும், மற்றும் அனைத்து தர்மத்தின் தயவாளர்களும், இந்த இனிய நூலை வாசித்து தர்மத்தை உணர்ந்து, வாழ்வில் வளம், செயலில் வீரம், அன்பில்

மவுனம், அறிவில் ஞானம், தெளிவில் வேகம், உடலுக்கு ஊக்கம் பெற்று பல்லாண்டு பல்லாண்டு பல கோடி நூறாண்டு வையகத்தில் வாழ்வாங்கு வாழ வாழ்த்தி இறுதியில் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று உய்ய எல்லாம் வல்ல தனிப்பெரும் கடவுள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், திரு அருட்பிரகாச வள்ளல் பெருமான் மலரடி பாதம் போற்றி வணங்குகிறேன்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!

வாழ்க தர்மம்! வளர்க தர்மம்!

நன்றி! வணக்கம்

இங்ஙனம்

தங்கள் உயிர் நேய

**ஸ்ரீ நந்தானந்தன் (எ) நந்த கோபால்**

(சதுரகிரியார்)

தீபம் அறக்கட்டளை

வேளச்சேரி - 600 042

14.5.2014

தர்மத்தை உணர்வோம்! தர்மத்தை காப்போம்!

# வாழ்த்துரை

உலக மக்கள் “எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி?” என்று தேடி கலங்கும் பாய்மரப் படகு போல், வாழ்க்கைப்பயணத்தில் ஒளிவெள்ளமாக இங்கே கரை என்று காட்டி கரை ஏறுவதே நிம்மதி ஆகும். நமது தீபநெறியில் வள்ளலார் வழிகாட்டுதலுடன், மாதம் ஒரு ரோஜா பூவாக மலர்ந்து இன்று காண்போர் வியக்கும் நிலையில் வண்ணமிகு, எழில்மிகு பொருள் மிகுந்த முழு மாலையாக நமது கைகளில் இப்புத்தகம் தவழ்கின்றது.

மனித வாழ்க்கை கருவறையில் துவங்கி கல்லறை முடியும் வரை தேடலே வாழ்க்கையாக உள்ளது. நாம் எதை தேடுகின்றோமோ அந்த தேடலின் முடிவு நிறைவாகும். (மனநிம்மதி). நிறைவின் முடிவு நிம்மதி என்னும் ஞானமாகும். உள்ளங்கை நெல்லிக்கனி போன்று எளிய நடையில் ஆழ்ந்த கருத்துகள் பதிந்து தெள்ளிய நீரோடை போல நமது மனதை தெளிவடைய வைக்கின்றது. இது புத்தகம் அன்று சிறந்த நண்பன் போல் உரையாடலாம்.

**யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**
**வான் பற்றி நின்ற மறைபொருள் சுறிபின்**
**ஊன் பற்றி நின்ற உணர்வு அது மந்திரம்**
**தான் பற்ற பற்ற தலைபடும் தானே”**

**– திருமூலர்**

இப்புத்தகம் உங்களுக்கு தெரிதலைவிட உணர்தலே வாழ்க்கையில் வளமோடு, நலமோடு, மனநிறைவோடு, வாழ வழிவகுக்கும்.

நன்றி

வாழ்த்துக்களுடன்
**ச. நாராயண மூர்த்தி**
பள்ளிக்கரனை
நிர்வாகி
14.05.2014 தீபம் அறக்கட்டளை

# பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | நிறைவும் நிம்மதியும் | 13 |
| 2. | தீதும் நன்றும் பிறர் தர வாரா! | 18 |
| 3. | என்ன செய்தார்கள்?<br>என்ன செய்கிறோம்?<br>என்ன செய்யலாம்? | 21 |
| 4. | பிறவாமை | 31 |
| 5. | என் தலையெழுத்து | 34 |
| 6. | பழையன கழிதலும், புதியன புகுதலும் | 37 |
| 7. | மாற்றங்கள்<br>ஏற்றங்களா ? ஏ... மாற்றங்களா ? | 40 |
| 8. | அணுகுமுறை | 44 |
| 9. | வினைகள், விளைவுகள் | 47 |
| 10. | எத்தனை கோடி<br>இன்பம் வைத்தாய் இறைவா | 51 |
| 11. | இறைவனின் திருமாளிகை | 54 |
| 12. | மூன்று விண்ணப்பங்கள் | 58 |
| 13. | ஆலயந்தொழுவது சாலவும் நன்று | 62 |
| 14. | கவலைகள் துறந்திட!<br>துரத்திட !! ஒதுக்கிட !!! | 65 |
| 15. | தீபத்தின் இலக்கு | 69 |
| 16. | பார்வை இழந்தவன் கையில்<br>கொடுக்கப்பட்ட விளக்கு | 74 |
| 17. | புதியதோர் உலகு செய்வோம் | 76 |
| 18. | ஏற்பது இகழ்ச்சி | 80 |
| 19. | காலமும்... நேரமும்... | 84 |

# பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 20. | உணர்வுகள் | 90 |
| 21 | போதுமே போராட்டங்கள் | 95 |
| 22 | விரயமாக்கப்படும் மணித்துளிகள் | 98 |
| 23 | என்று மடியும் இந்த அடிமை மோகம்? | 102 |
| 24 | தொடரட்டும் பயணம் | 106 |
| 25 | சான்றோர் வாழ்வில் சில நிகழ்வுகள் | 111 |
| 26 | அகல உழுதல் போதாது<br>ஆழ உழுதல் அவசியம் ! மிக அவசியம் | 114 |
| 27 | படித்தவை – பதிந்தவை :<br>கலீல் கிப்ரான் சொன்ன கதை | 118 |
| 28 | அரசன் அன்று கொல்வான்<br>தெய்வம் நின்று கொல்லும் | 121 |
| 29 | EDGING GOD OUT (EGO) | 125 |
| 30 | டாக்டர் கலாம்  ஐயாவின்<br>கனவுகள் நனவாக | 128 |
| 31 | கற்றவை – பெற்றவை | 130 |
| 32 | விடை காண வேண்டிய வினா | 132 |
| 33 | படித்தவை – பதிந்தவை : ஆலிவ் மரம் | 134 |
| 34 | புகழ்த்துறவு | 137 |
| 35 | அற்புதங்கள் | 141 |

# நிறைவும் நிம்மதியும்

“எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும்” எனும் கவியரசர் கண்ணதாசனின் பாடல் நினைவுக்கு வருகிறதல்லவா?

நிம்மதி விரும்பாதார் எவரேனும் இருப்பார்களா? மனிதவாழ்வின் உன்னத இலக்கு இவைதான் என எடுத்துரைக்கும் ஓரடி-ஈரடி பாக்கள், நாலடிகளில் கவிதைகள் என எண்ணற்ற இலக்கியங்கள் ஒருபுறம், அவைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்து தங்கள் புலமையையும்-பேச்சாற்றாலையும் இணைத்து மேடைதோறும் முழங்கிடும் பண்டிதர்கள் மறுபுறம், என ஏராளமாக அறிவுரைகளையும் - அறன் வலியுறுத்தும் சொற்பொழிவுகளையும் செவிமடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஏன்? **நிறைவும், நிம்மதியும்** பெரும்பான்மை மனிதருக்கு எட்டாக்கனியாகவும், சிற்சிலருக்கு சொற்ப நேரமே அனுபவிக்க கிட்டுகின்ற உணர்வுகளாகவே இருந்து வருகிறது. நிம்மதியையும் மன நிறைவையும் நிரந்தரம் ஆக்கிக்கொள்ளும் வழி! நெறி! யுக்தி! பயிற்சிகளை பதஞ்சலி முனிவர், திருமூலர், திருவள்ளுவர், ஔவையார் இவர்கள் காலத்திலிருந்து சித்தர் பெருமக்கள், பட்டினத்தார், தாயுமானவர் முதலானோரைத் தொடர்ந்து அண்மைக்காலத்து விவேகானந்தர், வள்ளலார் வரை எத்தனை படைப்புகளை வழங்கி இருக்கிறார்கள்.

எடுத்துரைக்கபட்டவை அனைத்தும் ஏற்று நடைமுறைப்படுத்த முடியாதவைகளா? அல்லது அவைகளை ஏற்கும் பண்பினை மனிதன் இழந்து வருகின்றானா? நிறைவிற்கும், நிம்மதிக்கும் இன்றைய மனிதன் புதிய இலக்கணம் கற்பிக்கிறான் போலும்!!

சில அடிப்படையான ஐயப்பாடுகள்? வினாக்கள்? மன நிறைவும்! நிம்மதியும்! பூரணமாக அனுபவித்த மனித சமுதாயம் எங்காவது எப்போதாவது இருந்ததா? பரிணாம மனிதன் எப்போது நிம்மதியை இழந்தான்? வளர்ச்சியின் ஒரு நிலையில் மனிதன் எண்ணும் ஆற்றலை பெற்றிருப்பான். கூடவே இலவச இணைப்பாக அவா, ஆசை எனும் உணர்வு, உந்துதல் (Urge) தோன்றியிருக்கக்கூடும்.

ஆசை, பேராசையாகி பிரச்சனைகளின் தோற்றுவாயாக! துன்பங்களின் ஊற்றுக்கண்ணாக! பிறர் பொருள் அபகரிப்பவனாக! பெருங்செல்வம் ஈட்டல்தான் வாழ்வின் குறிக்கோள் என்று உறுதியாக

நம்புபவனாக! இழிசெயல்களில் ஈடுபடுபவனாக! பெரும்பான்மையோரை வறியவாரக்கி சிலர் மட்டும் வள்ளல்களாக வாழ்வதாக பெருமிதம் கொள்பவனாக! நெறியிழந்த நடுக்கந்தான் செயல்களை நியாயப்படுத்தும் வல்லமை பெற்றவனாக உருமாறி அவன் நிம்மதியையும், மனநிறைவையும் நிரந்தரமாக பெற்றிடா வண்ணம் ஆட்டிப்படைக்கின்றது.

நிம்மதியைத் தேடி சாராயக்கடை சந்துகளிலேயும், சாக்கடை ஓரங்களிலேயும் விழுந்து கிடப்போரையும், மனநிறைவை நாடி, நீதிமன்றங்கள் வாயிற்படியில் காத்து நிற்போரையும், சூதுகளியாட்டக் கூடங்களில் புகை மண்டலத்திலேயே (Smoking) மூழ்கி வெளியேவர இயலாமல் தத்தளிப்போரையும் காணும் போது நெஞ்சம் பதைக்கிறதல்லவா? மௌனக் குமுறலைத்தவிர ஒன்றும் செய்ய இயலாதோர்தான் நம்மில் அதிகம்.

அன்றாடக் கடமைகள் அனைத்தும் செவ்வனே முடிந்தால் ஏற்படும் உணர்வுதான் மனநிறைவா? கடினமான காரியம் நிறைவேறிவிட்டால் ஏற்படும் உணர்வுதான் மனநிறைவா? பலருக்கு பயன்படுமாறு ஒரு படைப்பினை உருவாக்கிய பிறகு ஒரு உணர்வு ஏற்படுமே அதுதான் நிறைவா?

படிப்பில் தேர்ச்சி, போட்டியில் வெற்றி, வழக்கில் வந்த சாதகமாக தீர்ப்பு, தீட்டப்பட்ட திட்டங்கள் முழுமையாக நிறைவேறும் போது, நோய் முற்றிலும் குணமாகும் போது, புதுவரவு கிடைக்கும் போது என எத்தனையோ கட்டங்களில் மன நிறைவை அனுபவிக்கிறோம். அல்லவா?

நிம்மதி புயல் ஓய்ந்தது, பெருமழை நின்றது, வரவிருந்த ஆபத்து நீங்கியது, விபத்து தவிர்க்கப்பட்டது, மின் தடை நீங்கியது, மன இருள் அகன்ற, மருட்சி விலகியது என்ற பல சந்தர்பங்களில் நிம்மதி பெருமூச்சை விடுகிறோம். இவைகள் அனைத்தும் தற்காலிகம்தானே! ஒரு நண்பரின் அனுபவம் உண்மை நிகழ்வு அவரே சொல்கிறார். கேட்போம்.

நான் ஒரு சிற்றுரில் வசிக்கிறேன். எங்கள் ஊருக்கு ஒரு ஸர்க்கஸ் கம்பெனி வந்து முகாமிட்டு பலத்த விளம்பரங்கள் செய்தது. அவ்வூர் மக்கள் இதுவரை பார்த்திராத பல அற்புதக் காட்சிகளை விளம்பர படங்களாக பார்த்த மக்களுக்கும் ஆர்வம் பெருகியது. காட்சிகளை நேரில்காண கூட்டம் அலைமோதியது.

ஒருநாள் நானும் என் மனைவியும், பத்து வயது எங்கள் மகன்,

மூவரும் ஸர்க்கஸ் காண சென்றோம். டிக்கெட் வாங்கிட நின்ற நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தோம். ஒரு ஏழை பெற்றோரும் (உடையும் தோற்றமும் அளித்த அபிப்பிராயம்) அவர்களது மூன்று குழந்தைகளுக்கும் (சுமார் 8-10 வயதினர்) எங்களுக்கு முன்பாக வரிசையில் நின்றிருந்தனர்.

அந்தக் குழந்தைகளின் முகங்களில்தான் எவ்வளவு குதூகலம், உற்சாகம் பொங்க அந்தக் குழந்தைகள் தங்களுக்குள் பேசிக் கொள்வதும்! சிரிப்பதும் மாறி! மாறி தங்கள் அப்பாவை ஏதேதோ கேள்விகள் கேட்பதும்! துள்ளிக் குதிப்பதும் பார்க்க பார்க்க எங்களுக்கும் ஆர்வம் பொங்கியது.

காட்சிகளை காணும் முன்பே அந்த குழந்தைகள் சஞ்சரித்துக் கொண்டிருந்த கற்பனைக் காட்சிகளை என்னால் உணர முடிந்தது. ரசிக்க முடிந்தது. டிக்கெட் கவுண்ட்டர் அருகே வந்து விட்டோம். அந்தக் குழந்தைகளின் தந்தை, எவ்வளவு என டிக்கெட் தருபவரைக் கேட்கிறார். இரண்டு பெரியவர்கள், மூன்று குழந்தைகள் என்று ஒரு தொகையை சொல்கிறார். அந்த தந்தையின் முகத்தில் ஓர் ஏமாற்றம்! தவிப்பு! சோகம்! அதிர்ச்சியில் தாக்குண்ட அவர் முகத்தை கண்டேன் அவர் தன் மனைவியின் முகம் நோக்க, சங்கடத்தில் ஆழ்ந்த அந்த அன்னை தலை கவிழ்ந்தாள். குதூகலம் குறையாமல் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தன அந்த மூன்று குழந்தைகளும்.

ஒரு கணம் (Fraction of Second) என்னுள் ஓர் நல்லெண்ணம் பளீரிட்டது. உடனே செயல்படுத்தினேன். ஒரு நூறு ரூபாய் நோட்டை அந்த தந்தையின் அருகே தவறவிட்டேன், அடுத்த கணம் அதை எடுத்து ஐயா, இது தங்களுடையதா? இதையா தேடுகிறீர்கள்? என்றேன்.

அந்த நண்பரும் அதே கணத்தில் நிலைமையையும் எனது நற்செயலையும் புரிந்து கொண்டவராக என்னிடமிருந்து அந்த நூறு ரூபாயைப் பெற்றுக் கொண்டார். அந்த கை குலுக்கலில்தான் எத்தனை நன்றி உணர்வு! குழந்தைகளை அழைத்துக் கொண்டு அவர்கள் முன்னே செல்ல, நாங்கள் எங்கள் இருக்கைகளை நோக்கி நடக்கலானோம்.

அன்றைய ஸர்க்கஸ் காட்சிகளை விட அந்தக் குழந்தைகளின் குதூகலம் கலந்த முகங்கள்தான் எனது உள்ளத்தை நிறைத்தன. எத்தகு மனநிறைவை உணர்ந்தேன் தெரியுமா?

உண்மையில் நண்பருக்குக் கிடைத்ததுதான் சரியான

முழுமையான மன நிறைவு. தேவையானவர்கட்கு, தேவையான தருணத்தில், தேவையான அளவு உதவி செய்வதில்தான் நிறைவு. தக்கதருணத்தில் தகுந்த உதவி! இதைத்தான் வள்ளுவர்,

**காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தில் மாணப் பெரிது** – குறள் 102

என்றாரோ?.

**ஒரு குட்டிக் கதை :**

ஒரு ஊரின் கோடியில் விசாலமான திறந்தவெளி, குன்று போல் அமைந்திருந்த நிலப்பரப்பில் பெரியதொரு கட்டிடம் எழுப்பும் பணிகள் நடந்து கொண்டிருந்தன. ஆண்களும், பெண்களுமாக தரப்பட்ட பணிகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அந்த மேடான பகுதிக்கு, செங்கற்களை சுமந்தவண்ணம் பத்துக்கும் மேற்பட்டோர் பணியாற்றிக் கொண்டிருந்தனர்.

அவ்வழியே நடந்து சென்ற ஒரு முதியவர் இக்காட்சிகளை சிறிது நேரம் வேடிக்கை பார்த்த பின்னர் செங்கற்களை சுமந்து சென்று கொண்டிருந்த ஒரு பணியாளரை அணுகி, ஐயா நீங்கள் என்ன செய்து கொண்டுருக்கிறீர்கள்? என்று கேட்டார். என்ன கேள்வி ஐயா இது? உனக்கு கண் தெரியவில்லையா? என் விதியை நொந்து கொண்டு அல்லல்படுகிறேன். நீ வேறு கேள்விகேட்டு என் எரிச்சலைத் தூண்டுகிறாய். “போயா அப்பாலே” என்று சலிப்புடன் சினந்து சென்றார். முதியவர் மௌனமானார். சிறிது இடைவெளிக்குப்பின் அதே பணியில் ஈடுபட்டிருந்த இன்னொருவரை அணுகி இதே கேள்வியை கேட்டார், முதியவர். ஐயா, என் குடும்பத்தாரைக் காப்பாற்ற நான் இப்பணியைச் செய்கிறேன். குடும்பப் பொறுப்பு என்னுடையது என் கடமையைச் செய்து கொண்டிருக்கிறேன். பதில் சொன்ன இரண்டாமவர் சுமையோடு முன்னேறுகிறார். பெரியவர், மெல்லிய புன்னகையோடு சிறிது நேரம் கழித்து மூன்றாவது முறையாக, அதே பணியில் இருக்கும் இன்னொருவரை இதே கேள்வியைக் கேட்கிறார்.

ஐயா, இங்கே ஒரு பெரிய ஆலயம் நிர்மாணிக்கப்படுகிறது. அந்த ஆலயப்பணியில் என் சிறிய பங்கினை செலுத்திக் கொண்டுள்ளேன் என்றார், மூன்றாமவர். ஒரே பணி மூவருக்கும், பணிக்கான ஊதியம் ஒரே மாதிரிதான், ஆனால் மூவரின் மனப்பாங்கு! முதலாமவர் சுமையென

சலித்துக் கொள்கிறார். இரண்டாமவர் கடமையென திருப்தி தெரிவித்தார். மூன்றாமவர் சுகம் சுமமென நிம்மதியும்! நிறைவும்! ஒரு சேர அனுபவித்துக் கொண்டு பணி செய்கிறார்.

கேள்வியைக் கேட்டு நமக்கு இந்தச் செய்தியை வழங்கிய முதியவர் தனது நடையைத் தொடர்கிறார். கவலைகள் பிரச்சனைகளே சூழாத, தாக்காத, நிம்மதியும்! நிறைவும்! எப்படி கிடைக்கும்?

நீங்காத்துணைவர்களாக நமக்கு இவை கிடைக்க வேண்டுமெனில், தெளிவு! தூய்மை! துணிவு! இம்மூன்றும் நம்மிடம் நிலையாக இருந்திடல் வேணும். ஓர் எளிய சூத்திரம். (Simple Formula)

**1. நல்லவனாக இரு!**

**2. விரும்பத்தக்கவனாக இரு!**

**3. உபயோகமானவனாக இரு!**

இது எப்படி சாத்தியம் என்றுதானே கேட்கிறார்கள்? சாத்தியப்படுத்துதல் மிக எளிது. பிறர் துணை ஏதுமின்றி முழுக்க முழுக்க உங்களாலேயே சாத்தியப்படுத்தக்கூடியவை, சத்தியம் சொல்கிறேன்.

தெரிந்து கொள்ளும் ஆர்வமுள்ளோர் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள். சாத்தியக்கூறுகளை சமர்ப்பிக்கிறேன் சந்தோஷமாக.



சத்திய ஞானசபை – வடலூர்

# தீதும் நன்றும் பிறர் தர வாரா!

கணியன் பூங்குன்றனார் எனும் பழந்தமிழ்ப் புலவர் இயற்றிய **“யாதும் ஊரே யாவரும் கேளிர்”** எனத் தொடங்கும் புற நானூற்றுப் பாடலின் இடையே வருகின்ற ஒப்பற்ற ஓர் வரிதான் “தீதும் நன்றும் பிறர்தரவாரா” **தீமைகளாயினும், நன்மைகளாயினும், பிறர் மூலம் தானே நாம் பெறுகிறோம்!**

நாமும் பிறருக்கு ஏராளமான நன்மைகளை வழங்கி வாழ்விப்பதாக பெருமைபேசிக்கொள்கிறோமே! இதுதானே இன்றைய வழக்கு நடைமுறை தீதும் நன்றும் பிறர்தரவாரா ! எனும் கூற்றின் பொருள் சற்று குழப்பத்தை விளைவிக்கிறதே? சரியான பொருளை புரிந்து கொள்ளாததனால் உண்டாகிற குழப்பமன்றி வேறில்லை. பிறர்தரவாரா எனின் நன்மைகளாயினும், தீமைகளாயினும், பிறர் நமக்குத் தீங்கும் இழைக்க இயலாது. நலன்களையும் நல்கிட முடியாது என்பது தானே பொருள். ஆனால் நடைமுறையில் நமது அனுபவங்கள் என்ன? பிறப்பிலிருந்து எண்ணிப்பார்.

ஊட்டி வளர்த்த தாய், ஊட்டமளித்த தந்தை, ஊக்கமளித்த உறவினர், கல்விச்செல்வம் அளித்த ஆசிரியப்பெருமக்கள், கலைகளில் தேர்ச்சிதந்த சர்வ கலாசாலைகள், உழைப்பைப்பெற்று உரிய ஊதிய மளித்திட காத்து நிற்கும் ஏராளமான உற்பத்தி ஆலைகள், வியாபார நிறுவனங்கள் என எத்தனை எத்தனையோ நலங்களை நன்மைகளை பிறரால்தானே நாம் பெறுகிறோம்.

தீமைகளைக் கூட பிறர்தானே பல்வேறு சந்தர்ப்பங்களில் நம் மீது திணிக்கிறார்கள். நெறி பிறழ்ந்த வாழ்க்கைக்கு அடிப்படையே தீய நட்பு என்று நாம் அறியாததா?

ஏமாற்றுவதையே சாமர்த்தியம் என எண்ணிக் கொண்டு எத்தனை விதமான சீரழிவுகளை – தீமைகளை அப்பாவிகள் மீது ஒரு கூட்டம் திணித்து கொண்டிருக்கிறதே! நேர் வழியில் செல்ல விரும்பும் ஒருவனை தீயநெறிக்கு உய்ப்பதும் பிறர் தாமே!

பூங்குன்றனாரின் இந்த வரிக்கு பின் என்னதான் பொருள் சாகாத இலக்கியமாயிற்றே சங்ககால இலக்கியங்கள். காலம் மாறிப்போனதே – இப்போது நிலை தலைகீழாகிவிட்டது என்று சமாதானப்படுத்திக் கொள்வதும் விரும்பத்தகாதது. அந்த ஒப்பற்ற வரியின் உன்னதம் அன்றும், இன்றும், என்றும், என்றென்றும், நிலைத்து நிற்கும். நாம் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

அன்றும் தீமையைத் திணித்தவர்கள் இருக்கத்தான் செய்தார்கள். கோவலன் கொல்லப்பட காரணம் தீமையைத் திணித்த கூலவாணிகன் தானே? தன் துணைவியின் கால் சிலம்பை விற்கச்சென்ற கோவலன் கதிக்குக்காரணம் என்ன? ஊழ்வினை என்று சுலபமாகச் சொல்லி நம்மை சமாதானப்படுத்துவர். இந்த சமாதானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் தான் இன்றும் இருக்கிறோம்.

சோழ நாட்டில் பெரு வணிகனாக இருந்த கோவலன், நாடு பெயரக்காரணம் என்ன? காற்சிலம்பை விற்க மதுரை வீதிகளில் வலம் வரவேண்டிய துயரம் ஏன் வந்துற்றது ? என்பது பற்றியும் சற்று சிந்திப்போமானால் கோவலன் கதிக்கு கோவலனே தான் காரணம் என்பது விளங்கும்.

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்** – குறள் 505

நம்மால் முடியாது – முடியவே முடியாது என்கிற வேறு வழியே இல்லை என்கிற – கையற்ற நிலை மனிதனுக்கு என்றும் ஏற்படாது முயன்றால் மனிதனால் முடியாதது ஒன்றும் இருக்காது என்கிற நிலை நோக்கித்தான் நடந்து கொண்டுள்ளான் இன்றைய மனிதன்.

**தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்**
**மெய் வருத்தக் கூலிதரும்** – குறள் 619

முயற்சிகள் நேர் வழியில் செல்லாமல் குறுக்கு வழிகளில் செல்வது தான் இன்றைய அவலம். **நன்மைகள் என நாம் இன்று ஏற்பவை எதிர்பார்பவைகள் யாவை? தீமைகள் என நாம் அஞ்சி ஒதுங்குவதும் தவிர்க்கத் துடிப்பதும் யாவை?** பட்டியலிடும் பணியினை உங்களுக்கே விட்டு விடுகிறேன். நீங்கள் நினைத்துப் பார்க்கும் அத்துணை நன்மைகளையும் பணத்தால் பெற இயலும் அத்தனை தீமைகளையும் பணத்தால் தவிர்த்திடவும், தீவிர முயற்சிகள் மேற்கொள்கிறோம்.

நீங்கள் பிறரால் பெற்ற இப்படிப்பட்ட நன்மைகள் நன்மைகளே அல்ல. அனுபவித்த அல்லல்களும் – தீமைகளும் தீமைகளே அல்ல. பின் **தீதும் – நன்றும் யாவை ?**

நல்ல எண்ணங்களை உங்கள் உள்ளத்தில் விதைத்தல் சில நல்ல மனிதர்களால் இயலும், ஆனால் சிலரால் நல்ல எண்ணங்களை வளர்ப்பதும் – நிலை பெறச்செய்வதும் பிறரால் இயலுமா? **அது உங்களால் மட்டுமே முடியும்.** நீங்கள் நல்ல எண்ணங்களின் நிலைக்களனாக இருப்பதும், தூய்மையின் உறைவிடமாக மாறுவதும் முழுக்க முழுக்க

உங்கள் பொறுப்பு – உங்களால் மட்டுமே முடியக் கூடியது. **எண்ணங்கள் தான் வாழ்க்கை என்பது அனுபவம் உணர்த்தியுள்ள பேருண்மை.**

ஆகவே தீதும் நன்றும் நமக்கு யாரோ அளிப்பதல்ல என்பதனை உறுதியாக நம்பி, நல்லெண்ணங்களின் உற்பத்திக்களமாக உருமாறுவோம். தன் ஆற்றலால், திறமையால், மனத்திண்மையால் நன்மைகளைப் பெறுவோம். தீமைகளை தவிர்த்திடுவோம்.



வள்ளல் பெருமான் அவதரித்த திருமருதூர் கிராமத்திற்கு சிதம்பரத்திலிருந்து செல்லும் பாதை
அன்றைய தோற்றம் பழைய கோப்பு படம்

# என்ன செய்தார்கள்? என்ன செய்கிறோம்? என்ன செய்யலாம்?

**என்ன செய்தார்கள்:–**

**நான்மறைகள் ஓதினார்கள்**

**இதிகாசங்கள் இயற்றினார்கள்**

**புராணங்கள் படைத்தார்கள்**

**ஒரே மதத்தில் பல பிரிவுகள் கண்டார்கள்**

**தத்துவ விளக்கங்கள் சொன்னார்கள்**

தங்கள் கொள்கை – கோட்பாடு – மதம் உயர்ந்தது என வாதிட்டார்கள். பாஷ்யங்கள் எழுதி நுணுக்கங்கள் பரிமாறிக் கொண்ட பண்டிதர்கள் பாமரனை பக்திமானாக உருவாக்குவதிலேயே கவனம் செலுத்தினார்களே தவிர, பண்டிதனாக்கும் முயற்சி நடைபெறவே இல்லை.

பல மதங்களை உருவாக்கினார்கள். பல கடவுள்கள் – பலவிதமான வழிபாட்டு முறைகள். பற்பல ஆலயங்கள் அமைக்கப்பட்டன. இந்தியாவில் மட்டும் ஏறக்குறைய மூவாயிரம் கடவுள்களுக்கு வெவ்வேறு விதமான – விநோதமான வழிபாடுகள் நடைபெற வழி செய்தார்கள். மதவாதிகள் தங்களுக்குள்ளே வாதிட்டார்கள். தங்களைப் பின்பற்றுவோர் இடையே பிணக்கும் பகையும் வளர்த்தார்கள். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றார்கள். ஏட்டளவில் நின்றது அந்த வார்த்தைகள்.

**"கேடில் விழுச்செல்வம் கல்வி"** என்றார்கள். கல்லாதோர் எண்ணிக்கை அளவற்றதாக இருந்தமைக்கு காரணம் காணாமலே பக்தியை மட்டும் பரப்பிக் கொண்டிருந்தார்கள். வீரம் என்று வீம்பு பேசி தங்களுக்குள்ளே சதா போரிட்டுக் கொண்டு மடிந்தார்கள்.

பாரதப் போரில் பதினெட்டு அக்குரோணி சேனை போரிட்டதாம். அதாவது, பல கோடி போர் வீரர்கள், யானை – குதிரைகள் – தேர்கள் – அனைத்தும் அழிந்தனவாம். இறுதியில் ஏழே பேர் தான் உயிருடன் இருந்தார்களாம். பாரதக் கதையில் இந்த விவரம் காணப்படுகிறது. இப்படிப்பட்ட போர் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டாமா? எவ்வளவோ மாயங்களைச் செய்து பாண்டவர்களைக் காப்பாற்றிய அல்லது வெற்றி பெறச் செய்த கிருஷ்ணன் துரியோதனனின் மனதில் மாற்றத்தைச் செய்திருக்கக் கூடாதா? இந்தப் போரை நியாயப்படுத்திய நமது முன்னோர் இன்று வரை தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டு தானே இருக்கிறார்கள். சறுக்கல் அங்கே – அப்போதே நிகழ்ந்துவிட்டது.

போரில்லாத நாடாக – பகையே இல்லாத மக்களாக நாம் இருக்க வேண்டும் எனும் பயிற்சி ஏன் தரப்படவே இல்லை. புத்தர் வந்தார் – வேள்விகள் தவிர்க்கப்பட வேண்டியவை – விவேகமற்ற செயல் என உறுதியாக சொன்னார். வாய்மை, நேர்மை முதலான அட்டாங்க விதிகள் சொன்னார். அதீத ஆசைகள் தான் துன்பத்திற்குக் காரணம் என்றும், துன்பமே இல்லாத வாழ்க்கை அமைந்திடவும் – அமைத்துக் கொள்ளவும் அஹிம்சை – ஆணவமற்ற மனப்பாங்கு – பணிவு, எளிமை இவைகளை முக்கியமென வலியுறுத்தி மறைந்தார்.

மகாவீரர் கண்ட ஜைன மதம் எந்த ஜீவராசிக்குமே தீங்கு விளைவிக்காமல் வாழ்கின்ற வாழ்க்கை பற்றிச் சொன்னார் – வாழ்ந்தார். சில குருமார்களை மட்டுமே அப்படிப்பட்டவர்களாகக் காண முடிகிறது. மற்றையோர் வெறும் சடங்குகளை பின்பற்றி நாங்களும் தீர்த்தங்கரர் கொள்கைகளை போற்றுபவர் எனச் சொல்லிக் கொண்டு வாழ்கிறார்கள். ஏசுபிரான் அவதரித்தார். பழைய மத வழக்கங்களை சற்றே மாற்றி, புதிய ஏற்பாடு தந்தார். சுருக்கமாக மிக சுருக்கமாக, அன்பே ஆதாரம் என்றார். வன்மம் – வன்முறை அறவே கூடாது என்றார். கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை காட்டுங்கள் என்றல்லவா போதித்தார். சிலுவையில் அறையப்பட்டு மாண்டார். நபிகள் நாயகம் பக்கத்து வீட்டுக்காரனை பரிவோடு பார்க்க தெரியாதவன் பக்தியை, இறைவன் ஏற்கமாட்டார் என உறுதியாக, தெளிவாகச் சொன்னார்.

நமது பட்டியலில் இன்னும் சீக்கிய மதம் – ஜாரதுஷ்டிர மதம் – வைணவ – சைவ – சாக்த மதங்கள் என வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், அனைத்திலும் மையமாகச் சொல்லப்பட்டுள்ள அடிப்படை கோட்பாடு, அன்பு – பரிவு – எளிமை இவைகள்தான். ஆமாம், அன்பை பரப்பிட – நிலை கொள்ளச் செய்யத்தானே மதத் தலைவர்கள் – மத நிறுவனர்கள் பற்பல உக்திகளை – பல்வேறு வழிபாட்டு முறைகளை – பக்திப் பாடல்களை – பாசுரங்களை – இயற்றினார்கள். இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகும் – இத்தனை மதங்கள் பரப்பப்பட்டும் – இத்தனை ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டும் – இத்தனை அர்ச்சனை, ஆராதனை, பிரம்மாண்டமான பிரம்மோற்சவங்கள் நடத்தப்பட்டும், இத்தனை கடவுளர்கள் அருள்பாலித்தும் அடுத்தவர் மீது அடைக்குந்தாழில்லாத அன்பும் பெருத்தம், நிபந்தனைகளே இல்லாத பிரவாகமான அன்பு அரிதான ஒன்றாகவே இருக்கிறதே! ஏன்? இந்த சமுதாயம் வழி நடத்தப்பட்டதிலே எங்கோ சிறு பிசகு ஏற்பட்டிருக்க வேண்டும். காட்டுமிராண்டியாக வாழ்ந்த கற்கால – உலோககால மனிதன், படிப்படியாக உருமாறி உள்ளத்து எண்ணங்கள் தெளிந்து – உயர்ந்து அனைவரையும் நேசிப்பவனாக அல்லவா மாறி இருக்க வேண்டும்.

இனிய உளவாக – இன்னாதன அல்லவா கூறிக் கொண்டு, நன்மைகள் கைக்கெட்டும் தூரத்தில் கிடைக்கும் போது தீமைகளை – துயரங்களை நாடி வன்முறையிலேயே வாழ்வை நகர்த்துகிறானே! ஏன்? “ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் ஏய உணர்வித்த என்னம்மை” அத்தனை கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். நமக்குக் கற்பித்தார்கள் அல்லவா?

மதங்கள் – குருமார்கள் – அவர்தம் போதனைகள் – பக்திப் பாசுரங்கள் – பதினெட்டுப் புராணங்கள் – எண்ணற்ற ஸ்தல புராணங்கள் – ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஓர் புராணம் என எவ்வளவு முயற்சிகள். மனிதனின் மனப்பாங்கு முழுமையாக மாறவில்லையே. மனிதன் மாமனிதனாக அல்லவா உயர்ந்திருக்க வேண்டும். அடுத்து வந்தவர்கள் – சித்தர்கள். உள்ளத்திற்கும் உடலுக்கும் சேர்த்து மருந்து சொன்னார்கள். அற்புதங்களை ஆற்றும் வல்லமை பற்றி ஏட்டில் எழுதிச் சென்றார்கள்.

அனைத்து இடர்களுக்கும் தீர்வாக சொல்லப்படுவது யோகக்கலை. இந்தக்கலையின் ORIGINATOR நாம் தான். இன்று பலரால் பயிற்றுவிக்கப்படுகிறதே இதன் பிறப்பிடத்தில் வாழ்கின்ற நம்மில் பெரும்பாலோருக்கு அந்தக் கலையில் தேர்ச்சி இருந்திருக்க வேண்டுமல்லவா? அண்மைக் காலத்தில் தான் இதுபற்றி அதிகம் பேசப்பட்டு வருகிறது. இப்போதும், பேசப்பட்டுதான் வருகிறதே தவிர – சில நூறு பேர்களைத் தவிர மற்றைய பெரும்பான்மையோருக்கு இந்தக்கலை இன்னமும் அன்னியமாகவே உள்ளது. எவ்வளவோ செய்தார்கள், அரும் பெரும் காரியங்கள் ஆற்றினார்கள் நமது ஆன்றோர்.

**“தீதும் நன்றும் பிறர்தர வாரா” என்றனர்.**

**“இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டாம்’**

என்று சொல்லி இலவசத்தை ஏற்க மறுத்தனர். பெரியோர் எனின் வியத்தலும் இலமே சிறியோர் எனின் இகழ்தல் அதனினும் இலமே, எனத் தன்னம்பிக்கைக்கு துதி பாடினர்.

**புகழெனின் உயிரையும் கொடுப்பர் பழியெனின்**

**உலகொடும் பெறினும் வேண்டலர்**

இவ்வளவும் சொல்லி – இப்படியெல்லாம் வாழச்சொல்லி கற்பித்து எத்தனை நூற்றாண்டுகள் ஆகின்றன! இவ்வளவு அறநெறிகளுக்கு சொந்தக்காரர்களாகிய நாம் இன்று என்ன செய்கிறோம்? மத நல்லிணக்கம் பேசிய மகாத்மா காந்தி மகானை சுட்டுக் கொன்றோம்.

மரணமிலாப் பெருவாழ்வு வாழ வழிகாட்டுகிறேன் என்று சொன்ன

வள்ளலாரை, சுத்த சன்மார்க்க சங்கம் அமைத்த அருளாளரை, சினத்தை முதலில் தவிர்க்க முனையுங்கள் – உங்களை வழிநடத்தி வாழ்வாங்கு வாழச் செய்கிறேன் என முழங்கிய வள்ளலாரை, பணிவும் – அன்பும் – எளிமையும் தான் ஏற்றந்தரும் எனப் பகர்ந்த ஏந்தலை, பசிப்பிணி மருத்துவரை, எவ்வளவு போற்றினோம்? எப்படிப் பாதுகாத்தோம்? எவ்வளவு பேர் பின்பற்றுகிறோம்? எத்தனையோ அருளாளர்கள் பசிப்பிணி மருத்துவர்களாக மாறியிருப்பது உண்மை. அறப்பணிகள் ஆற்றுவதும் உண்மை. மிகையாகவே கணக்கிட்டாலும் தமிழ் நாட்டில் ஊருக்கு ஒரு பத்து அருளாளர்கள் என்றாலும், ஒரு பத்தாயிரம் அறவோர் ஒரு லட்சம் பேருக்கு அன்றாடம் அன்னதானம் செய்வதாக வைத்துக்கொள்வோம், இந்த இலவச உணவைப் பெறுவோரின் நிலைபற்றியும், சற்று சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இப்போது இருக்கிறோம்.

**“பாத்திரம் அறிந்து பிச்சை இடு”** எனும் பழைய வழக்கு ஒன்று உள்ளது. இலவசத்தை ஏற்கத்துடிக்கும் ஆர்வம், படிக்கப்படுகிற – பாராயணம் செய்யப்படுகிற அகவலை கேட்பதில் கொஞ்சம் கூட இல்லை. கவனமெல்லாம் எப்போது இலை போடுவார்கள் என ஒருவரை ஒருவர் முந்துவதில்தான் முழு கவனமும் உள்ளது. இந்த அவலம் – இந்த இலவச மனிதர்கள் – இரந்துண்டு வாழ்பவர்கள், எப்போது தன்னிறைவு பெறுவது? தாங்களே தருபவர்களாக மாறுவது எப்போது? இவர்கள் மாற வேண்டாமா? மாற்றப்பட வேண்டாமா? அவர்களை பிச்சைக்காரர்களாகவே வைத்து நாம் வள்ளல்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**என் கடன் பணி செய்து கிடப்பதே.**
**யான் பெறும் இன்பம் பெறுக இவ்வையகம்.**
**எல்லோரும் இன்புற்றிருக்க**
**நினைப்பதுவே யல்லால்**
**வேறொன்றறியேன் பராபரமே!**

தாயுமானாரை நினைவில் வைத்திருப்போர் – அவர் வாக்கை கடைப்பிடிப்போர், இருக்கிறார்களா எனத் தேடி பார்க்க வேண்டும். இதுதான் இன்றைய நிலை. **நாகரீகம் மிக்க நாம் இன்று என்னதான் செய்து கொண்டிருக்கிறோம்.**

குண்டு வைக்கிறோம். அப்பாவிகளைக் கொல்கிறோம். மிகப்பெரிய அளவில் நூதனக் கொள்ளைகள் நிகழ்த்துகிறோம். அனைத்து மட்டங்களிலும் லஞ்சம் வாங்குகிறோம். ஊழல்களைக் கூட பெரிய அளவில் – மிகப் பெரிய அளவில் மிகுந்த துணிச்சலோடு செய்து

விட்டு நியாயம் கற்பிக்கிறோம்.

மத நல்லிணக்கம் பேசிக் கொண்டே புராதன கட்டிடங்களை இடித்துத் தரைமட்டமாக்குகிறோம். சராசரி மனிதனுக்குத் தெரிய வேண்டிய, நியாயக் கடமைகளைக் கூட உயர்நீதிமன்றம் – உச்சநீதிமன்றம் அரசுக்கு அறிவுறுத்த வேண்டியுள்ளது.

நிலுவையிலுள்ள வழக்குகளுக்குத் தீர்ப்பை எதிர்பார்த்து வருடக் கணக்கில் காத்து நிற்கிறோம். அவசரமாக தீர்ப்பு தேவை என்று அன்றாடம் ஒரு புது வழக்கை சமர்ப்பித்துக் கொண்டே இருக்கிறோம். பட்டிமன்றங்கள் நடத்துகிறோம். அரங்கமே அதிர்கின்ற சிரிப்பொலிகள் – கைதட்டல்கள். **வாய்மையும் – நேர்மையும் கூடியதா?** பெண்மையின் கண்ணியம் பற்றியும் – மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்றும் முழுங்கிவிட்டு, தொலைக்காட்சி விளம்பரங்கள் ஒன்று விடாமல் பெண்களை காட்சிப் பொருளாக – கவர்ச்சிப் பொருளாகவே காட்டி விரும்பத்தகாத மனக்கிளர்ச்சிகளுக்கு வழி வகுக்கிறோம்.

திங்களுக்கு இரண்டு திரைப் படங்களாவது தயாரிக்கிறோம் (with no exception) ஒவ்வொரு படத்திலும் கதாநாயகன் 15 நிமிடங்கள், தொடர்ந்து, குறைந்த பட்சம் 10 பேரையாவது அடித்து நொறுக்குகிறான். இது போன்ற ஒரே படத்தில் மூன்று முறையாவது சண்டைக்காட்சிகள் அமைத்து ஒரு பெருங்கூட்டம் சுற்றி நின்று வேடிக்கை பார்க்குமே தவிர, அதில் ஒருவர் கூட கதாநாயகனுக்கு துணையாகச் சென்று, குற்றவாளிகளை – வன்முறையாளர்களைத் தாக்கும் துணிச்சல் பெறுவதாக காட்சி அமைத்திட மாட்டோம். அவ்வளவு பேரையும் கோழைகளாகக் காண்பிப்பதிலும், கோழைகளாக வாழவைப்பதிலும் தான் எங்களுக்குத் திருப்தி. இப்போதைய எங்கள் இலட்சியம் கதாநாயகன் Cutout க்கு பால்குடம் எடுப்பதும் – பாலாபிஷேகம் செய்வதும் தான். இதைவிட அரியதான ஆக்கப்பணி வேறு என்ன இருக்க முடியும்.

ஆண்டு முழுமையும் இலட்சக் கணக்கில், வெவ்வேறு ஆலயங்களுக்கு வேண்டுதல் நிறைவேற்றிட கூட்டம் கூட்டமாகச் செல்கிறோம். குறிப்பாக, ஏழுமலையானை தரிசிக்கச் செல்வோர். ஓர் அரை வினாடி கூட அந்த ஆண்டவனை தரிசிக்க முடியாமல், ஆடு மாடுகளை போல் விரட்டப்படுகிற வேதனையோடு, நெரிசலில் நசுங்கித் திக்குமுக்காடித் திணறி வெளியேறுகின்ற நிலை அன்றாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவா பக்திப் பரவசம்!

சின்னத்திரைகள் – இன்றைய நடுத்தரவர்க்கப் பெண்டிர் பெரும்பான்மையோரின் புகலிடம். சின்னத்திரைகள் ஒளிபரப்பும் நீண்ட

நெடுந்தொடர்கள் எனின் மிகையாகாது. ஒரு தொலைக்காட்சி நிறுவனம் சற்று ஏறக்குறைய 10 நெடுந்தொடர்களையாவது ஒளிபரப்புகின்றது. சராசரியாக, 4 அல்லது 5 மணிநேரம் ஒரு நாளைக்கு இவைகளைப் பார்த்துக் கொண்டிருப்போர் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர். இதில் கொடுமை யாதெனின் ஒரே மையக் கருத்துதான். வித்யாசமான நடிகர்களால் நடிக்கப்படுகின்றது. நம்பத்தகாத அளவிற்கு நல்லவனாக, நல்லவளாக ஒரு பாத்திரம். இழி செயல்களில் எல்லையையே தாண்டுகின்ற இன்னொரு பாத்திரம். இந்தக் கொடுமைகளெல்லாம் குடும்பங்களில் நடப்பதாகச் சித்தரித்து, குடும்பத் தலைவிகளின் ஆரோக்யமான சிந்ததனைகளை சிதைத்துக் கொண்டிருக்கின்ற இந்த நீண்ட நெடுந்தொடர்கள், ஆண்டுக் கணக்கில் அல்லவா தொடர்கின்றன. இவர்களுக்கு சமுதாயப் பொறுப்பை யார் சொல்லப் போகிறார்கள்!

சுற்றுப்புறத்தூய்மை பற்றி பள்ளிக் குழந்தைகட்கு பாடம் சொல்கிறோம். பல்கலைக்கழகங்களில் முதுகலை பட்டம் பெறும் அளவிற்கு நூல்கள் செய்துள்ளோம். மாசு–தூசு கட்டுப்பாடு வாரியம் அமைத்துள்ளோம். பிரத்தியேகமான அமைச்சகம் உண்டு. மேலை நாடுகளில் நடக்கின்ற மாநாடுகளில் பங்கேற்று உரையாற்றுகிறோம். ஆனால் சாலையோரம் – கழிவு நீர் கால்வாய்கள் – குப்பைக் குவியல்களாக நிரந்தரமாக்கிவிட்டு விமர்சனங்களை மட்டும் அள்ளி வீசிடும் மேன்மக்கள் – மேன்மக்களாக உலா வருகிறோம்.

சாலை விதிகளை மதித்து வாகனங்களில் செல்வது அசட்டுத்தனம், அவசரமே தெரியாத அப்பாவிகளுக்கு மட்டும் தான் சாலைவிதிகள் என்று இருசக்கர வாகனங்களில் பறக்கிறார்களே நம்மவர்கள், பார்த்து, பிரமித்து நிற்கிறீர்கள் அல்லவா? கூடவே கைதொலைப்பேசியை கழுத்துக்கும் – காதுக்கும் இடையில் செருகி மிகமிக அவசரமான செய்திகளை பரிமாறிக் கொண்டே செல்வதையும் கண்டு வியந்து போகிறோம் அல்லவா? நடக்க இருக்கும் விபரீதத்தை எண்ணி பயந்து நிற்பவர் பலர்.

**கட்சிகள்:** மக்களை ஈடேற்ற மதங்கள் உருவானது போல மக்கள் சேவைக்கென்றே கட்சிகள் உருவாக்கினோம். சிறியதும் – பெரியதுமாக நமது மாநிலத்தில் மட்டும் நூறுக்கும் மேலாக கட்சிகள் உள்ளன. கொடிகளும் உண்டு. தான் சார்ந்திருக்கும் கட்சியின் கொள்கைகள் யாவை என்ன என்று தெரியாத தொண்டர்களும் உண்டு. பொதுக் கூட்டங்கள் நடத்துகிறோம். சில லட்சங்கள் செலவாகும். ஒரு சில தலைவர்கள் கலந்து கொள்ளும் சிறப்புக் கூட்டங்களுக்கு சில 'C' (Crores – கோடிகள்) செலவாகிறதாம்.

மக்கள் சேவைக்குத் தான் கட்சிகள் என்றால் மத நல்லிணக்கம் பேசும் நாம், மிகப் பெரிய அளவில் கொள்கை வித்யாசமில்லாதவர்கள் இணைந்து 3,4 கட்சிகள் செயல்படலாமே! இவ்வளவு கட்சிகள் ஏன் என்று புரியாமலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மனித நேயம் பற்றி பேசுவோம் – படிப்போம் – எழுதுவோம். பட்டிமன்றம் நடத்துவோம். அற்புதமான மேற்கோள்கள் சொல்லி கை தட்டல் பெறுவோம்.

Queue Bypass செய்வதை சாமர்த்தியம் என்று பெருமை பட்டுக் கொள்வோம். பேருந்தோ, ரயிலோ வந்து நின்று சகமனிதர்கள் இறங்குவதற்கு முன்பு, இறங்கவிடாமல் (அ) கைப்பை காட்சி அளிக்கும். அதாவது அந்த இருக்கைகள் சாமர்த்தியசாலிகளால் ஆக்ரமிப்பு (Reserve) செய்யப்பட்டு விடும்.

அனைத்திற்கும் சிகரமாக இன்று நம்மை பீடித்திருக்கும் பெருநோய் Indifferent ATTITUDE. இன்றைய சமுதாயத்தின் சீர்கேடுகள் அனைத்திற்குமான காரணம் நம்மிடையே பெருகி வரும் எனக்கென்ன என்ற மனோபாவம்.

இத்தகு மனநிலைக்கு தாங்கள் தள்ளப்படுவதாக, சில சாமார்த்திய சாலிகள் பல நிகழ்வுகளை விளக்குவார்கள். இது ஆராயப்பட வேண்டிய ஒன்று.

இத்தனை குறைபாடுகளை பட்டியலிடுகிறீர்களே, எவ்வளவோ ஆக்கப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றனவே. அவை உங்கள் கண்ணில் படவில்லையா? கருத்தைக் கவரவில்லையோ? என்று உங்களில் சிலர் கேட்கக்கூடும். ஆக்கப்பணிகள் நடக்கத்தான் செய்கின்றன AT WHAT COST?

அண்மையில் செய்தித்தாள்கள் வெளியிட்ட ஊழல்கள் உங்களை உறையச் செய்ய வில்லையா? ஒவ்வொரு மாநிலமும் தங்கள் பங்கை செவ்வனே நிறைவேற்றி வருவதைக் காண்கின்றோம்.

ஒரே ஒரு அலுவலகத்தில் அல்லது பணிமனையில் கையூட்டு பெறாமல் காரியங்கள் நடக்கின்றன என்று நாம் பெருமிதப்பட முடியுமா? என்னதான் செய்யலாம் – குறைகளை அடுக்குவதனால் ஒரு பயனும் இல்லை, ஏற்றுக் கொள்கிறேன்.

**என்ன செய்யலாம்:**

நம்மால் இனி ஒன்றும் செய்ய இயலாது – தலைக்கு மேல்

போய்விட்டது என்று பேசும் மேன்மக்கள் முதலில் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இப்போதைய அவலங்கள் மாற வேண்டும் – மாற்றியே ஆக வேண்டும். கட்சித்தலைவர்கள் ஓர் சுற்றறிக்கை விடலாம். நமது கட்சித் தொண்டர்கள் யாவரும் நடுநிலை பிறழாமல் கண்ணியத்தோடு மக்களுக்கான கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற ஒரு வரி கட்டளையை தங்கள் தொண்டர்களுக்கு பிறப்பிக்கலாம். இதுமட்டும் நடைபெறுமானால் இந்த மாநிலம் மிகக்குறைந்த அளவு குற்றங்கள் நடைபெறும் மாநிலமாக போற்றப்படும். காவல்துறை தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பர். நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள் சமரசத்தில் முடியும். ஐயா, நீங்கள் இல்லாத ஊருக்கு வழி சொல்கிறீர்கள்! இது நடக்கக் கூடியதாக இருந்தால், எப்போதோ நடந்து முடித்திருக்கும் என நீங்கள் ஆயாசப்படுவது புரிகிறது. நாம் – நாம் மட்டுமே முயன்றால் முடியக் கூடியதாக ஒன்று சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள் –படியுங்கள்.

**தனிமனித ஒழுக்கம்**

இது நம் கையில் தானே உள்ளது.

1. **நல்லவனாக இருந்தால்** சோதனைகள் வரலாம். பிறருக்கு வேதனைகள் வராதல்லவா?

2. **விரும்பத்தக்கவனாக இருந்தால்** நம்மைத் துன்புறுத்த துணிபவர்கள் மிகமிக சொற்பமாகிவிடுவர்.

3. **உபயோகமானவனாக இருந்தால்** – மற்றவர்க்கு நம்மால் இயன்ற அளவு நன்மை செய்தால் நமது கண்ணோட்டமே விரிவடையும்.

உங்களைத் தூற்ற நினைப்பவர் தூர விலகுவர். இந்த மூன்று எளிய வழிகளைக் கடைப்பிடித்தால் நம்மில் ஒரு நல்ல மாற்றம் – முன்னேற்றம் நிகழும். அடுத்து நம்மால் மட்டுமே செய்ய முடிவது. நமது குடும்பத்தினருக்கு, நல்லவனாக – விரும்பத்தக்கவனாக – உபயோகமுள்ளவனாக இருத்தல்.

குடும்பத்தினரை நம் வழி – நல்வழி நடத்திட முன்னோடியாக இருத்தல். இவைகளோடு இன்னும் கூடுதலான ஆர்வமுள்ளோர் நமது நண்பர்கள் – சுற்றம் என ஒரு பத்து அல்லது பதினைந்து நபர்களிடத்தில் நல்லவைகளை எடுத்துரைக்கலாம். இந்த முறை, நெஞ்சார்ந்த துடிப்புடன் (with dedication) செய்யப்பட்டால் நம்மில் பெரும்பாலோரிடத்தில் நல்ல மாற்றம் நிச்சயம் நிகழும்.

**"கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்கா**
**கசடற்கு தூக்கு மரம் ஆங்கே உண்டாம் "**


என உரக்க முழங்கிச் சென்றான் பாரதிதாசன். முதலில் கல்லார் யாவர்? கல்வியின் இலக்கணம் யாது? என சற்று புரிந்து கொள்வோம். கல்லார் எழுத்தறிவு இல்லாதோர் எனக் கொள்ளுதல் முழுக்கவும் சரியானதல்ல. படிக்காத மேதைகள் பலர் பார் புகழ் பெற்றுள்ளனர். இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகின்றனர். கல்லார் அறியாமையால் அவதிப்படுபவர்கள். ஆணவத்தால் அழிந்து கொண்டிருப்பவர்கள் செய்யக் கூடாதவற்றை, தவறு எனத் தெரிந்தே செய்து கொண்டிருப்பவர்கள்.

**கல்வி எனின் ஏட்டறிவு மட்டும் அன்று**
**கேடில் விழுச் செல்வம் கல்வி**

கற்றதனாலாய பயனென் – வாலறிவைத் தொடராவிட்டால் நல்லவைகளை சிந்திக்க – நல்ல செயல்களுக்குத் திட்டம் தீட்டிட – தாம் பெற்ற நல்லவைகளை பகிர்ந்திட நினைப்பவன்தான் கல்விமான். நாம் பெற்ற கல்வியை – நற்சிந்தனைகளை, கல்லார் சிலருக்காவது உணர்த்த முனைவது தான் உபயோகமாக இருக்கும்.

சுருக்கமாக சொல்லப் போனால், நாம் நல்லவனாக இருக்க முயல்வோம். சிலரையேனும் நல்லவனாக மாற்ற முயற்சி மேற்கொள்வோம். இக்கால கல்வி பற்றியும், கலாசாலைகளின் பணிபற்றியும் இங்கிலாந்து பிரதமராக இருந்த Winston Churchill பெருமகனார் கூற்றுடன், இந்தக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

The first Duty of a UNIVERSITY is to teach WISDOM, not TRADE, CHARACTER, not TECHNICALITIES" - **Winston Churchill**






வள்ளல் பெருமான் அவதரித்த இல்லத்தின் தோற்றம் அன்றும் இன்றும்